| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **06/04/2024** | முதல் | **10/04/2024** | |
| அறிக்கை எண் : | **028/ 2024** | வெளியீட்டு நாள் : | | **05/04/2024** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (31.03.2024 **முதல்** 04.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 10-04-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31/03 | 01/04 | 02/04 | 03/04 | 04/04 | **தேதி** | நாள்-1<br>06/04 | நாள்-2<br>07/04 | நாள்-3<br>08/04 | நாள்-4<br>09/04 | நாள்-5<br>10/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 39 | 39 | 39 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 39 | 38 | 38 | 39 |
| 25 | 27 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 26 | 27 | 27 |
| 2 | 4 | 3 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 3 | 4 | 0 | 3 |
| 63 | 65 | 63 | 73 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 80 |
| 35 | 42 | 39 | 38 | 41 | | 20 | 20 | 20 | 30 | 30 |
| 5 | 12 | 12 | 7 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 10 | 12 | 10 |
| தென் மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | **கிழக்கு** |

### குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு** (05 முதல் 18 ஏப்ரல் 2024):

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் பொதுவாக குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட அதிகரித்து காணப்படும். 38° செல்சியஸ் முதல் 40° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட சற்று குறைவாக காணப்படும். 32° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது சற்று அதிகரித்து காணப்படும்.20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது சற்று குறைவாக காணப்படும்.20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு (06.04.2024 முதல் 09.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : நெல், மல்லிகை, கால்நடை.**

**நெல்:**

நெற் பயிரில் கொம்புப் புழு தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதன் புழு நெற் பயிரின் இலை விளிம்புகளை ஒழுங்கற்ற முறையில் ஓரத்திலிருந்து நுனி வரை கடித்து உண்ணும்.

இதன் தாக்குதலை கட்டுப்படுத்த வயலில் நீரை வடிய செய்து விட்டு, பின் மாலை வேலைகளில் ஒரு டேங்கிற்கு 6 கிராம் என்ற அளவில் இமாமெக்டின் பென்சோயேட் அல்லது ஒரு ஏக்கருக்கு 20 மிலி என்ற அளவில் ப்ளுபென்டமைடு மருந்தினை தெளிக்க வேண்டும்.

**மல்லிகை:**

விவசாயிகள் தங்கள் வயல்களில் மண் மாதிரி எடுத்து நூற்புழு தாக்குதலைக் கண்காணிக்க வேண்டும்.

தாக்குதலின் அறிகுறியாக மல்லிகை செடிகளின் இலைகள் வெளிறிய இளம் மஞ்சளாகி பின்னர் கருகி விடும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 4 கிலோ என்ற அளவில் பேசிலோ மைசிஸ்லிலாசினஸ் எனும் உயிரி இடுபொருளை வேர்ப்பாகத்தின் அருகில் இட்டு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

**கால்நடை:**

நிலவும் அதிகரித்த உயர் வெப்பநிலையை கருத்திற் கொண்டு தங்களது கால்நடைகளுக்கு தமிழ்நாடு கால்நடை பல்கலைக் கழகத்தின் தானுவாஸ் தாதுக் கலவையினை ஒரு நாளைக்கு ஒரு கால்நடைக்கு 50 கிராம் என்ற அளவில் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

மேலும் இவ்வெப்பக் காலத்தினை தாங்கும் பொருட்டு கால்நடைகளுக்கு தேவையான அளவு சுத்தமான தண்ணீரைக் கொடுக்கவும்.

.